அலையும் முகில்களே எழுந்தாடும் அலைகளே
மாவீரர் பெருமை தனை அறிவீரோ
அவர் காதினில் ஒரு சேதி தருவீரோ
உமை தேடுகிறார் வாடுகிறார் என உரைப்பீரோ

அலையும் முகில்களே எழுந்தாடும் அலைகளே
மாவீரர் பெருமை தனை அறிவீரோ

ஆண்டுகள் கடந்ததென்று மறப்போமா
மாண்டவர் மேலோர் என்று நினைப்போமா
அன்னைத்தமிழ் உயிர் வாழ வைத்தவரை
ஆதிசக்தி ஆக எண்ணி பணிவோமே

அலையும் முகில்களே எழுந்தாடும் அலைகளே
மாவீரர் பெருமை தனை அறிவீரோ

ஆயிரம் இடம் புரிகள் நடுவினிலே
வலம்புரி போல உம்மை போற்றுகிறோம்
ஆள்கடல் முற்றத்திலே ஒளி கொண்ட
முத்துக்களே நாங்கள் உம்மை மறப்போமா

அலையும் முகில்களே எழுந்தாடும் அலைகளே
மாவீரர் பெருமை தனை அறிவீரோ

கார்த்திகையின் முழுநிலவு நீங்கள் அன்றோ
காரிருளை கிளிக்கும் மின்னல் கேட்கவோ
ஆட்பரிக்கும் மலையின் ஓசை நாதமாய்
அவர்வாழ்வின் புகழினை இசைப்போமே

அலையும் முகில்களே எழுந்தாடும் அலைகளே
மாவீரர் பெருமை தனை அறிவீரோ